இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 04 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 29 – வியாழக்கிழமை 14 ஆகஸ்ட் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 04 : Thiruvalluvar Year - 2056 - Aadi 29 - Thursday 14 August 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2025) சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி, "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

### அரசின் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச்சென்று கொடுப்பது

# இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சியாகும்!

## "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டத்தைத் தொடங்கிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 14-**

**"அரசின் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச்சென்று கொடுப்பது இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சியாகும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "தாயுமானவர்" திட்டத்தை சென்னை தண்டையார்பேட்டையில் தொடங்கிவைத்து காணொலி பதிவில் கூறியுள்ளார்.**

70 வயதுக்கு மேற்பட்ட 20 இலட்சத்து 42 ஆயிரத்து 657 மூத்த குடிமக்கள் - ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 21 இலட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் பயனடையும் "தாயுமானவர் திட்டம்" தொடங்கி வைக்கப்படுவது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவு வருமாறு:-

வணக்கம்! நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம்! அந்த வரிசையில், என்னுடைய மனதிற்கு பிடித்த திட்டமாக உருவாகியிருப்பது தான், இந்த தாயுமானவர் திட்டம்!

கூட்டுறவுத் துறை சார்பில், வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று ரேசன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்! இப்படி, அரசின் சேவைகளை மக்களின் வீடுகளுக்கே தேடிச் சென்று கொடுப்பது, இந்தியாவிற்கே முன்மாதிரி முயற்சி!

ஒரு திட்டத்தை அறிவிப்பதோடு, கடமை முடிந்துவிடுவதாக நாம் நினைப்பதில்லை! அந்த திட்டத்தின் பலன் பயன், கடைக்கோடி மனிதரையும் சென்று சேருகிறதா என்று கண்காணிப்பதையும் கடமையாக நினைக்கிறேன்! அப்படி, வயது முதிர்ந்தோரும் மாற்றுத் திறனாளிகளும் ரேசன் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்குவதில் ஏற்படும் சிரமத்தை உணர்ந்து, இந்த திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்!

**கூட்டுறவுத் துறையின் மிகப்பெரிய சேவை!**

இந்தத் திட்டத்தை 34 ஆயிரத்து 809 நியாய விலைக் கடைகளில் செயல்படுத்த போகிறோம்! 70 வயதுக்கு மேற்பட்ட 20 இலட்சத்து 42 ஆயிரத்து 657 மூத்த குடிமக்கள் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத் திறனாளிகள் என்று 21 இலட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் இந்த திட்டத்தால் பயனடைய போகிறார்கள்! ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் குடிமைப் பொருட்கள் உங்கள் வீடு தேடி வந்து விடும்! இதற்காக கூட்டுறவுத் துறைக்கு ஆகப்போகும் 30 கோடியே 16 இலட்சம் ரூபாயை கூடுதல் செலவாக கருதாமல் மக்களுக்கு செய்யும் உயிர்காக்கும் கடமையாக நாங்கள் நினைக்கிறோம்! இது கூட்டுறவுத் துறையின் மிகப்பெரிய சேவை! அந்தத் துறை அதிகாரிகள், அலுவலர்கள், கடை விற்பனையாளர்கள் செய்யப் போகும் மிகப்பெரிய கடமை!

**பட்டினிச் சாவு இல்லாத மாநிலம்!**

தமிழ்நாடு முழுவதும் 37 ஆயிரத்து 328 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. இதில், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 2 ஆயிரத்து 394 புதிய நியாய விலைக் கடைகளை திறந்திருக்கிறோம்! தலைவர் கலைஞர் வழியில், இந்த நியாய விலைக் கடைகளை நாம் முறையாக சிறப்பாக நடத்துவதால்தான், தமிழ்நாடு இன்றைக்கு பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக இருக்கிறது! இந்த ரேசன் கடைகளின் பயன்பாட்டை இன்னும் எளிமையாக்க முயற்சிகள் எடுத்திருக்கிறோம்!

இந்த நேரத்தில், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு நான் வைக்கும் வேண்டுகோள் என்பது இந்த திட்டத்தின் நோக்கம் நூறு விழுக்காடு நிறைவேறும் வகையில் உங்களின் பணி அமைய வேண்டும்! உங்களை எதிர்பார்த்து காத்திருக்கும் முதியவர்களும் மாற்றுத்திறனாளிகளும் மனம் குளிரும் வகையில் நீங்கள் கனிவாக நடந்து கொள்ள வேண்டும்! நீங்கள் பெறும் நல்ல பெயர்தான், ஆட்சிக்கு கிடைக்கும் பாராட்டு!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் உரையாற்றினார்.

---

### பீகார் வாக்காளர் பட்டியல் முறைகேடுகள்!

## மக்களவையில் முறைகேடுகள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்!

### நாடாளுமன்ற எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கம்!

*புதுடெல்லி, ஆக.14-*

*பீகார் வாக்காளர் பட்டியல் முறைகேடுகள் குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தியதால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முடங்கின.*



*மக்களவை வழக்கம்போல் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு தொடங்கியதும், அவையின் அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு, பீகார் வாக்காளர் பட்டியல் முறைகேடுகள் குறித்து விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து வலியுறுத்தினர்.*

*ஆனால், இதனை ஏற்க சபாநாயகர் ஓம் பிர்லா மறுத்துவிட்டார். இதனால், அவையில் கூச்சல் குழப்பம் நிலவியது. டெல்லியில் 11.8.2025 அன்று நடைபெற்ற போராட்டத்தின் போது தாங்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.*

*இதனைத் தொடர்ந்து அவையை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.*

**மாநிலங்களவை**

*இதேபோல், மாநிலங்களவை கூடியதும், பீகார் வாக்காளர் பட்டியல் முறைகேடுகள் குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.*

*இதனைத் ஏற்க மறுத்த மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண், அவையை ஒத்தி வைப்பதாக அறிவித்தார்.*

---

### சேப்பாக்கம் — திருவல்லிக்கேணி தொகுதியில் 'முதலமைச்சரின்

## தாயுமானவர் திட்டத்தின்' கீழ் குடிமைப் பொருட்களை வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று வழங்கினார்!

**சென்னை, ஆக.14 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் குடிமைப் பொருட்கள் வழங்கும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார்.**

தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை சென்னை, தண்டையார்பேட்டை பகுதியில் முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2025) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டை பாலாஜி நகர் பகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் குடிமைப் பொருட்களை வழங்கும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று குடிமைப் பொருட்களை நேற்று முன்தினம் வழங்கி, அவர்களுடன் உரையாடினார்.

சிறப்பு கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும், இத்திட்டத்தின் கீழ் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் செயல்பட்டு வரும் 36 நியாய விலைக் கடைகளுக்குட்பட்ட 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட 2,467 குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்பங்களில் உள்ள 3,548 குடும்ப உறுப்பினர்களின் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மூடிய வாகனங்களில் மின்னணு எடைத்தராசு, e POS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாக தகுதியுள்ள பயனாளிகளின் இல்லத்திற்கே சென்று நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகம் செய்ய உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் தேனாம்பேட்டை மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி. வே.கமலா செழியன், சென்னை தெற்கு பொதுவிநியோகத் திட்ட இணைப் பதிவாளர் திருமதி எஸ்.லட்சுமி உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.